IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.168/2021
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 1.00 p.m.

வா.சா. 2 சாட்சி தமிழ்செல்வி க.பெ.நாராயணசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 27.03.2025 in accordance with the provisions of Act XX141.**

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் அரசு போக்குவரத்துக் கழககத்தில் நடத்துனராக வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் பணிஓய்வு பெறும்வரை திருநகரில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். தற்போது நாங்கள் வெள்ளாகுளம் கிராமத்தில் 2வருடமாக குடியிருந்து வருகிறோம். வெள்ளாகுளம் கிராமத்தில் எந்த பகுதியில் குடியிருந்து வருகிறோம் என்றால் தாவாச் சொத்துக்கு 2தெருக்கள் தள்ளி உள்ளது.

2. தாவா வழக்கின் 2ம்வாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் பெற்ற சொத்து காலியிடம் என்றாலும் தற்போதும் அது காலியிடமாக உள்ளது என்றாலும் சரிதான். மேற்படி இடமானது காலியிடமாக உள்ளதால் நானோ, 2ம்வாதியோ எவ்வித புழக்கமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. 2ம்வாதியான எனது சகோதரர் அரசுப்பள்ளியில் ஆசிரியர் என்றால் சரிதான். 2ம்வாதி திருநகரில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவ்வப்போது எங்கள் ஊருக்கு வருவார். தாவாச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. தாவாச் சொத்து வெள்ளாகுளம் கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண் 251B/8 ல் 6செண்டு ஆகும்.

4. தாவாச் சொத்தை பாக உரிமையாளர்கள் பாகம் பிரித்துக்கொண்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி பாகம் பிரித்ததின்பேரில் அவரவர் பாகத்தை அவரவர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் 1ம்வாதியும் அவரது சகோதரர் ராஜசேகரும் கிழக்கு பக்கம் வாசல் வைத்து வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 1ம்வாதி மேற்கு பக்கம் வாசல் வைத்துள்ளார் என்றும், அவருக்கு மேற்கு பக்கம் தென்வடல் பாதை உள்ளது என்றால் சரியல்ல. கிழக்கு பக்கம் தென்வடல் பாதை உள்ளது என்றால் சரியல்ல.

5. 1ம்வாதி, அவரது சகோதரர் ராஜசேகர் மற்றும் நாச்சியார்அம்மாள் ஆகியோர் மேற்கு பக்கம் தலைவாசலும், கிழக்கு பக்கம் வாசலும் வைத்து வீடு கட்டியுள்ளனர் என்றும் கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் தென்வடலாக பாதைகள் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை 2ம்வாதியும், எனது தந்தையும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் 2ம்வாதிக்கும், எனது தந்தைக்கும் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.

6. தாவாச் சொத்தை பாதை என்று நான் கூறும் நிலையில் பாதை என்பதைக் காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். தாவாச் சொத்து எந்தக்காலத்திலும் பாதையாக இருந்ததில்லை என்றும், தாவாச் சொத்தை பாகம் பிரித்து அதன் பங்கு உரிமையாளர்கள் அவரவர் பாகத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், வழக்குச் சொத்து எந்தக்காலத்திலும் பாதையாக இருந்ததில்லை என்றும் 2ம்வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.15 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.